பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆனி 6உ (20—6—67) செவ்வாய் ★ வெளியூர்: ஆனி 7உ (21—6—67) புதன் [இதழ்: 5

## வெளிநடப்பு

ஐ. நா. ஜுன் 19—
சோவியத் தலைமை அமைச்சர் கோசிஜின்—வெளிநாட்டுத் துறை அமைச்சர் குரோமிகோ ஆகியோர், ஐ. நா. அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்!

இஸ்ரேலிய வெளிநாட்டுத் துறை அமைச்சர் அப்பா பொன், சோவியத்தின் கொள்கையைப் பழித்துப் பேசுகையில்தான் அவர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

# சேலம் உருக்காலை: தமிழக அரசே துவக்கத் தயார்!

## சட்டமன்றத்தில் முதலமைச்சர் அண்ணா அறிவிப்பு

சென்னை, ஜுன் 20—

"சேலம் இரும்பு உருக்கு ஆலையை மத்திய அரசே துவக்க முன்வரவில்லையானால், அதன் பிறகு தமிழக அரசே அதனை நிறுவத் தயாராயிருக்கிறது"

என்று, இன்று சட்டமன்றத்தில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் திட்டவட்டமாக அறிவித்தார்கள்.

தமிழகத்தில் கனரக இயந்திர உற்பத்திக்கான தொழிற்சாலை நிறுவுவது குறித்தும், சேலத்தில் இரும்பு உருக்காலை நிறுவுவது குறித்தும் கேட்கப்பட்டிருந்த முதல் கேள்விகளுக்கு, தொழில் துறையமைச்சர் இரா. நெடுஞ்செழியன், தமிழக அரசின் நிலையை விளக்கிப் பதிலளித்துக்கொண்டிருந்தார்; அந்த நேரத்தில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களும் குறுக்கிட்டுப் பல துணைக் கேள்விகட்குப் பதிலளித்தார்.

"சேலம் உருக்காலையைத் தமிழக அரசே துவக்க முன் வருமா?"

என்ற கேள்விக்கு அண்ணா அவர்கள் பதிலளித்ததாவது:—

"தமிழக அரசே ஏன் இத்தொழிற்சாலையைத் துவக்கக்கூடாது என்று கேட்டுக் கொண்டிருந்த கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் நாங்கள். கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இப்படிக் கேட்கப்பட்டு வந்திருக்கிறது. இதை மத்திய அரசு நிறுவுவதாக ஏற்கனவே கூறியிருக்கிறது. அந்த வாக்குறுதியை நம்பித்தான் முந்திய அரசும் காத்துக் கொண்டிருந்தது; இப்போதும் அதை நம்புகிறோம். தன்னால் இதைத் துவக்க முடியாது என்று மத்திய அரசு திட்டவட்டமாகக் கூறி விடுமானால், பின்னர் பொதுமக்களிடம், 'மத்திய அரசு தீங்கு இழைத்துவிட்டது' என்பதை எடுத்துக் கூறி, தமிழ் மக்களின் பேராதரவுடன் தமிழக அரசே இத்தொழிற்சாலையைத் துவக்கத் தயாராயிருக்கிறது."

கே. பி. எஸ். மணி:—"பதினைந்து ஆண்டுகளாகப் பார்த்தாகிவிட்டது; சேலம் திட்டத்தை ஏலம் விட்டுக்கொண்டே இருக்கிறது மத்திய அரசு; எனவே மத்திய அரசின் அநீதியை எதிர்த்துக் கண்டிக்குமாறு மக்களுக்கு அரசு கோரிக்கை விடுமா?"

அண்ணா:—"இதனை நான் நிதிநிலை அறிக்கையிலேயே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன்—கண்டனம், கிளர்ச்சி, பதவித் துறப்பு—என்று; எனவே, இந்த அரசு இதுபற்றி மக்களின் கருத்தையும் கேட்டு அறியும்."

எஸ். ஜே. இராமசாமி:—"பதவி துறப்பது என்பது நாம் எடுத்துக்கொண்ட முயற்சியிலிருந்து பின்வாங்குவதாகும்; எனவே, பதவியைத் துறக்காமலே போராட அரசு முனையுமா?"

அண்ணா:—"பல பொதுப் பிரச்சினைகளுக்காகப் போராடிப் பழக்கப்பட்ட எனக்கு உறுப்பினரின் கேள்வி புதிய உற்சாகத்தைத் தருகிறது."

கே. ஆர். நல்லசிவம்:—"மத்திய அரசை வற்புறுத்திக்கொண்டே இருப்பதால் காலதாமதம் ஆகிறது; மத்திய அரசுக்கு ஒரு காலக் கெடு கொடுத்துவிட்டு, அதற்குள் செய்யவில்லையானால், அதன் பிறகு நாமே செய்ய முயற்சி செய்யலாம் அல்லவா?"

அண்ணா:— "அப்படித்தான் இந்த அரசு உத்தேசித்து இருக்கிறது."

வி. கே. கோதண்டராமன்:— "பத்தாண்டுக்குமேல் பார்த்தாகிவிட்டது; இனியும் ஏன் காலம் கடத்தப்படுகிறது?

(4-ம் பக்கம் பார்க்க)

## என். வி. நடராசன் 24–6–67-ல் சென்னை திரும்புகிறார்

மலேசியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்,சி. அவர்களும், திரு. மா. தங்கவேலர் அவர்களும் 24—6—67 இரவு சென்னை வருகிறார்கள்.

சிங்கப்பூரில் மாலை புறப்படும் விமானத்தில் ஏறி 24—6—67 இரவு 8-மணிக்கு மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இறங்குகின்றனர்.

## சட்டமன்றத்தில்...!

[போகாத நிருபர்]

காங்கிரசுக்காரர்களின் சட்டமன்றப் பேச்சுக்கள் எப்படி இருக்கப் போகிறது என்பதற்கு 'சாம்பிள்', நிதிநிலை அறிக்கை விவாதத்தைத் துவக்கிவைத்துப் பேசும் பேறுபெற்ற மார்ட்டின் என்ற உறுப்பினரின் உரையிலிருந்து தெரியவருகிறது.

ஆசிரியர் பாடத்தைச் சொல்லிக் கொண்டிருந்தபோது, கூரைத் துவாரத்தில் எலி நுழைவதைப் பார்த்துக்கொண்டிருந்த மாணவனிடம்—பாடம் முடிந்த பின்—'என்ன, (கருத்தில்) நுழைந்ததா?' என்று கேட்கப்பட்டபோது, 'வால் மட்டும்தான் நுழையவில்லை' என்றானாம்!

முதலமைச்சர்—பட்ஜெட்டைப் படித்து முடிப்பதற்குள்— 'எத்தனை முறை நீர் அருந்தினார்' என்பதைத்தான் மார்ட்டின் கவனித்திருக்கிறார் போலும்!

பட்ஜெட்டைக்கூட, அவர், 'திருவிழாக் காலங்களில் விற்பனையாகும் கலர் சர்பத்' என்று உவமை காட்டியிருக்கிறார்! அவரது உவமையெல்லாம், ஒரே 'திரவ' மயமாகவே இருக்கிறது!

'காய்ந்த' பகுதியிலிருந்து வந்தவர் போலும்! எனவேதான், 'பட்ஜெட், வறட்சியாக இருக்கிறது' என்றிருக்கிறார்!

அவரது கட்சித் தலைவர் கருத்திருமன், அவர் கூறியதைக் கேட்டு உண்மையிலேயே பதைபதைத்துப் போயிருக்க வேண்டும்! 'மார்ட்டின் பேச்சினை எடுத்துவிடுங்கள்' என்று அவர் கேட்டிருக்கிறார்!

**இந்தப் பேச்சு, மூடிமறைக்கப்பட வேண்டியதில்லை! 'பிளாஸ்திரி' போடாமலே ஆற்றப்படவேண்டிய புண் இது! எல்லோரும் பார்த்து மனம் புண்பட வேண்டும்!**

**இதற்கு அண்ணா அவர்கள் தந்த 'வைத்திய யோசனை' அரசியல் நோயாளிகளாகிவிட்டிருக்கும் அவர்களுக்கு, நல்ல பரிகாரம்தான்!**

'மார்ட்டினுக்கு நான் சளைத்தவனல்ல' என்று காட்டிக் [illegible]ண்டிருக்கிறார் மற்றொரு காங்கிரசு உறுப்பினர் மகா[illegible]!

காங்கிரசு வளர்க்கும் 'குண்டர்'கள் பற்றி அவ்வப்போது பலர் குறைபட்டு எழுதியும், பேசியும் வந்திருப்பது அவர் கருத்தில் பட்டிருக்கவேண்டும்; எனவே, அடுக்கு மொழியில் அவர், கழகத்துக்காரர்களை, **'துண்டர்'கள்** என்று கூறியிருக்கிறார்! இப்படிப்பட்ட பேச்சினையும் கருத்திருமன் கவனிக்கவில்லை போலும்!

அமைக்கப்போகும் சீரணியில், 'கறுப்பு-சிவப்புத் துண்டுகள் போட்ட தி. மு. க.-வினர் மட்டுமே இடம் பெறுவார்கள்' என்று கூறவந்தவர்தான், கழகத்தினரை, 'துண்டர்கள்' என்று கூறியிருக்கிறார்.

**'தொண்டர்கள்' என்று சொல்ல நினைத்து, மொழி வளம் இடம் தரவில்லை என்பதாலோ, 'துண்டர்கள்' என்று சொல்வதற்குத்தான் பக்குவம் பெற்றவர் என்பதாலோ அவ்வாறு கூறிவிட்டார்போலும்!**

ஆனால், மார்ட்டினும், மகாதேவனும், 'சினிமா தேசியமயமாக்கப்பட வேண்டும்' என்றும் பேசியிருக்கின்றனர்.

தேசியமயமாக்கியுள்ள பஸ் பாதைகள்பற்றியும், நகரங்களில் போடப்படும் ஒரு படி அரிசிபற்றியும் வாழ்த்தோ வரவேற்போ தெரிவித்திருந்தால், அவர்களுக்கு இதுபற்றி மேலும் கேட்கத் 'தகுதி' இருக்கிறது எனலாம்.

இந்த விஷயத்தில், அண்ணாவின் 'மாற்றான் தோட்டத்து மல்லிகை' உதாரணத்தை, ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள், தமது உரையில் தக்க வகையில் பயன்படுத்தியிருக்கிறார்; 'அடுத்த வீட்டுக்காரன் தோட்டத்தில் பூத்த பூ என்பதால், வாசனை இல்லை என்று கூறுவீர்களானால்—அரசாங்கம் செய்யும் நன்மைகளை நீங்கள் ஆதரிக்கவில்லையானால்—மக்கள் உங்களைச் சந்தேகப்படுவார்கள்' என்ற அவரது சட்டமன்றப் பேச்சு, முன்னாள் ஆளும் கட்சியினருக்குத் தக்க அறிவுரையாக இருக்கிறது!

"காங்கிரசுக்காரர்களின் தரக்குறைவான பேச்சுக்கள்தான் அவர்களுக்குத் தோல்வியைத் தந்தது; அதையே அவர்கள் சட்டமன்றம் வரையில் நீட்டுவார்களானால், பின்னர், கோட்டையைவிட்டே போய்விடும் நிலையை மக்கள் ஏற்படுத்திவிடுவார்கள்" என்று திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் மேலும் கூறியிருப்பது, 'உள்ளே' இருந்த மார்ட்டினுக்கும், மகாதேவனுக்கும் மட்டுமல்ல—'வெளியே' இருக்கும் மார்ட்டின்களுக்கும் மகாதேவன்களுக்கும் மொத்தமாகக் கூறப்பட்ட எச்சரிக்கையாகும்!

"இரயில் கட்டண உயர்வுக்கு-இரயில்வேக்களில் போடும் சாப்பாட்டின் விலை உயர்வுக்குப்போய் போராட்டம் நடத்துங்கள்" என்று ஆசைத்தம்பி அவர்கள், இங்கே உள்ள துடிக்கும் இரத்தங்களுக்கு'ச் சொல்லியுள்ள புத்திமதியைக் கேட்டபின்னராவது, எத்தனை பேர் பஸ் கட்டணக் குறைப்பை—படி அரிசித் திட்டத்தை மனமுவந்து பாராட்டினார்கள் என்று பார்ப்போம்!

பட்ஜெட் உரையின் மையக் கருத்தினை மேலும் வலியுறுத்தும் வகையில், மத்திய—மாநில அரசுகளின் நிதிவருவாய் இனங்கள் பற்றி திரு. இராம அரங்கண்ணல் தெரிவித்திருக்கும் கருத்துக்கள், பயனுள்ள சேர்க்கையாகும்.

"கல்வி, நீர்ப்பாசனம் போன்ற திரும்பக் கிடைக்காத இனங்களில் மாநில அரசு செலவு செய்யும் தொகைகள் அதிகம்; ஆனால், மத்திய அரசு, மாநிலங்களுக்குச் செலவு செய்யும் திட்டங்கள் திரும்பவும் வருவாயைக் கொடுப்பதாக இருக்கின்றன" என்று புதுடில்லி பெற்றுள்ள சாதக நிலை பற்றி அவர் கூறியிருப்பது, மாநில அரசின் பற்றுக்குறை நிதி நிலையை ஒரு கோணத்தில் இருந்து விளக்குவதாக இருக்கிறது.

"இந்த மாநிலத்திலிருந்து ஆயுள் இன்சூரன்சு பெறும் வருமானம், ரூ. 60 கோடிக்குமேல்; ஆனால் அந்த நிறுவனம், இந்த மாநிலத்துக்கென வழங்கும் தொகையோ ஒரு சில கோடிகள்" என்று கூறி அவர், தனது வாதத்துக்கு மேலும் வலிவு சேர்த்திருக்கிறார்!

நிதி நிலை அறிக்கையைப் பாராட்டிப் பேசியிருக்கும் கழக உறுப்பினர்களான தோழர்கள் **ந. தர்மலிங்கம், அக்கினிராசு, முத்துச்செல்வன்** ஆகியோர், தங்கள் தொகுதித் தேவைகள் குறித்தும் விளக்கியிருக்கின்றனர்.

திரு. சங்கரையா, திருமதி ஜானகி, திரு. ஹாண்டே போன்ற கம்யூனிஸ்டு—சுதந்திரா கட்சிகளின் உறுப்பினர்கள், கட்சி வரம்புகளுக்கு அப்பால் நின்று, நிதி நிலை அறிக்கையின் சிறப்புக்களைப் பாராட்டியிருப்பது சிறப்புக்குரியது!

"பஞ்சாயத்து யூனியன்களை அகற்றுவதன்மூலம் நிதிப் பற்றுக்குறையைச் சரி செய்யலாம்" என, தோழர் முனு ஆதி தெரிவித்திருப்பது, பத்திரிகைகளின் கவனத்தைக் கவர்ந்திருப்பது, சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

**மதுவிலக்குக் கொள்கையில் மயக்க நிலையில் உள்ள காங்கிரசுக் கட்சியின் உறுப்பினர் ஒருவர், அதே பாணியில், 'புதிய மொந்தையில் பழைய கள்' என்று புளித்துப்போன உதாரணத்தைப் பேசியிருப்பது, 'குடி'த்த நிலையில் வீட்டின் கதவைத் திறக்க முடியாதவன், 'ஏன் வீடு இந்த ஆட்டம் ஆடுகிறது?' என்று கேட்பதைப்போல் இருக்கிறது!**

**'சீரணி' பற்றிக் காங்கிரசு உறுப்பினர்கள், தங்கள் கட்சிச் 'சிறுவர்'களுக்காகக் காட்டிய 'பூச்சாண்டிப் பேச்சு'க்கு, 'மெயில்' எடு தந்துள்ள முக்கியத்துவம் தேவைதானா என்ற கேள்வி எழுகிறது!**

**வதந்திகளுக்கு வலிவு சேர்ப்பதில் உள்ள ஆபத்தினை உணர்ந்திருக்க வேண்டிய அந்தச் செய்தித்தாள், அபாண்டமான குற்றச்சாட்டுகளுக்குத் துணைபோவதில் உள்ள ஆபத்தினையும் இனியாவது தெரிந்துகொள்ள வேண்டும்!**

# வரி ஏய்ப்பைத் தடுத்து வருமானத்தைப் பெருக்கப் புதிய ஏற்பாடு

## ஏழையைப் பாதிக்காத வகையில் சிறிது வரி உயர்வு-- மெலிந்த வியாபாரிகளுக்கு விற்பனை வரியில் சலுகை

அரசின் வழிவகை நிதி நிலை, இடர் மிகுந்த ஒன்றாய் இருந்துவந்ததை எனது இடைக்கால வரவு-செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்டிருந்தேன். அதிகப்பற்றுகள் முற்றிலும் தற்காலிகமானவையாக இருக்கும்போது, இப்போது மத்திய அரசும், ரிசர்வ் பாங்கியும் அவற்றைப் பற்றிக் கவலை தெரிவிக்கின்றன.

நமது நிதி வசதிகளின் தற்போதைய மதிப்பீட்டின்படியும், திட்டத்திற்காக மத்திய அரசிடமிருந்து பெறக்கூடிய நிதியுதவியின்படியும், இவ்வாண்டு முடிவில் நமது ரொக்கக் கையிருப்பு ரூ. 4.70 கோடியாக இருக்குமெனத் தெரிகிறது. எனவே ரிசர்வ் பாங்கியிலிருந்து அதிகப் பற்றுகவே இது முடியும்.

நமது வளர்ச்சிப் பணிகளை—குறிப்பாக சமூக வளர்ச்சிப் பணிகளைக் குறைப்பதன் மூலம் வரவினங்களையும், செலவினங்களையும் தாழ்ந்த மட்டத்தில் சமன் செய்துகொள்வதா, அல்லது பொருளாதார நிலையில் மெலிவுற்ற மக்களுக்குப் பெரும் பளு ஏறாத முறையில் கூடுதல் நிதி வசதிகளைத் திரட்டுவதன் மூலம் சற்று உயர்ந்த மட்டத்தில் நம் வரவினங்களையும், செலவினங்களையும் சமன் செய்து கொள்வதா என்பதை நாம் முடிவு செய்யவேண்டும்.

வளர்ச்சிப் பணிகட்குரிய நிதி ஒதுக்கங்களை ஆராய்ந்ததில், அவற்றைப் பெரும் அளவிற்குக் குறைப்பது முடியாத செயல் என விளங்குகிறது.

நடைபெற்றுக் கொண்டுவரும் திட்டங்களை இடையில் நிறுத்தும்போது இதுவரை செய்யப்பட்ட முதலீடுகள் பயனளிக்காமற் போவதைத் தவிர்க்க முடியாது.

நாம் எடுத்துள்ள சிக்கன நடவடிக்கைகள் பலவற்றின் பயனையும் நாளாவட்டத்தில்தான் உணரமுடியும்.

நான்காம் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நிதி ஏற்பாடுகளின்படி' திட்டக் காலத்தின் எஞ்சிய பகுதியில் ரூ. 55 கோடி அளவிற்குக் கூடுதல் நிதி வசதிகளைத் திரட்டுவதாக 1966 நவம்பரில் திட்டக் குழுவும்—இம் மாநில அரசும் பேசியபோது ஒப்புக்கொள்ளப்பட்டது.

இந்த ரூ. 55 கோடி குறியளவு, எய்த முடியாததொன்று எனினும், மாநில ஐந்தாண்டுத் திட்டத்தை ஒரேயடியாகக் குறைப்பதைத் தவிர்க்கவேண்டுமானால், அக்குறியளவில் ஓரளவேனும் நிறைவேற்றுவதற்காக நாம் முயற்சிகள் எடுத்தாக வேண்டும்.

இவ்வாறு பழம் பொறுப்புக்களையும், இன்றைய புதுத் தேவைகளையும் நினைவிற்கொண்டு, அரசின் பின்வரும் நிதி திரட்டும் செயற்குறிப்புகளை மன்றத்தின்முன் வைக்கிறேன்.

முதல் செயற் குறிப்பு, விற்பனை வரி வீதங்களை மாற்றியமைப்பதைப் பற்றியதாகும். வருமானக் கணக்கில் நமது பற்றுக்குறையை ஈடுகட்ட உதவுவதற்காக மட்டுமன்றி, மத்திய விற்பனை வரி வீதம் சென்ற ஆண்டு 2 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக உயர்த்தப்பட்டதன் விளைவாகவும் இம்மாற்றம் தேவைப்படுகிறது.

மாநிலங்களுக்கிடையிலான விற்பனை மீதுள்ள வரி வீதம், ஒரு மாநிலத்துக்குள் நடைபெறும் விற்பனையின் வரி வீதத்தைவிடக் கூடுதலாக இருத்தலாகாது என்ற முக்கிய நெறிமுறையை மத்திய விற்பனை வரிச் சட்டம் விதித்துள்ளது.

இதுவன்றி, நிலக்கரி, பருத்தி, பருத்தி நூல், இரும்பு, உருக்கு, சணல், எண்ணெய் வித்துக்கள், ஏலக்காய், வேர்க்கடலை, தோல் போன்ற சில பொருட்கள் தனிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்தவை என அறிக்கையிட்டு, மாநிலங்கட்கிடையிலும்—மாநிலத்தினுள்ளும் நடைபெறும் விற்பனைகள் மீதான வரியின் உச்சவரம்பையும் இச்சட்டம் குறிப்பிட்டுள்ளது.

இந்த 'அறிக்கையிடப்பட்ட சரக்கு'களைப் (Declared Goods) பொறுத்தவரையில், சென்ற நிதியாண்டு வரை 2 சதவீதமாக இருந்த இவ்வுச்சவரம்பு, 3 சதவீதமாக மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் உயர்த்தப்பட்டுள்ளது.

நமது பொது விற்பனை வரிச் சட்டத்தின்படி, 'அறிக்கையிடப்பட்ட சரக்குகள்' மீதான வரி வீதம் 2 சதவீதமாகவும், அதற்குக் குறைவாகவும் உள்ளது; பலமுனை விற்பனை வரி வீதமும் 2½ சதவீதமாக உள்ளது.

இதன் விளைவாக, மாநிலங்களுக்கு இடையிலான விற்பனைமீது, இசைவளிக்கப்பட்ட இம்மூன்று சதவீத அளவிற்கு வரி விதிக்க முடியாமற் போகிறது.

நமது நிதி வசதிகளை மத்திய அரசு கணக்கிடும்போது, மத்திய விற்பனை வரி வீதத்தை இரண்டிலிருந்து மூன்றாக உயர்த்தியதன் பயனாக, மத்திய விற்பனை வரி மூலம் கிடைக்கும் வருமானம், விகிதாச்சாரப்படி உயரும் எனக் கணக்கெடுத்துக் கொண்டுள்ளபோதிலும், இப்போதுள்ள இந்நிலை காரணமாக, மத்திய விற்பனை வரிவீத மாறுதலின் முழுப் பயனையும் நாம் அடைய முடியாமற் போகிறது.

எனவே, தமிழக பொது விற்பனை வரிச் சட்ட வரி வீதங்களை மீண்டும் ஆய்வு செய்வது அவசியமாகிறது.

விற்பனை வரியைப் பொறுத்தமட்டில், பண்டங்களை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்—

(i) தமிழகப் பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் அட்டவணையில் கண்டுள்ள முதல் பதினான்கு பொருட்கள், 'ஆடம்பரப் பொருட்கள்' எனக் கூறப்படும். இவைமீது, 1965 டிசம்பர் முதற் தேதியிலிருந்து 11 சதவீத ஒருமுனை விற்பனை வரி விதிக்கப்படுகிறது.

(ii) 2 சதவீதமும், அல்லது அதற்குக் குறைவாகவும் வரி விதிக்கப்படடுவரும் 'அறிக்கையிடப்பட்ட சரக்குகள்—'

(iii) ஆடம்பரப் பொருட்கள்—அறிக்கையிடப்பட்ட சரக்குகள்—இவை நீங்கலான பண்டங்களில், தமிழகப் பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் அட்டவணையில் காணப்படும் ஒருமுனை விற்பனை வரியின் கீழ்வரும் பண்டங்கள்—

(iv) பலமுனை விற்பனை வரியின்கீழ் வரும் பண்டங்கள்—

ஆடம்பரப் பொருட்கள் எனக் கூறப்படும் கார், குளிர்பதனப் பெட்டி போன்ற—தமிழகப் பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் அட்டவணையில் 1 முதல் 14 வரையுள்ள பொருட்களின் மீதான விற்பனை வரியை 11 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக உயர்த்த அரசு இப்போது முடிவு செய்துள்ளது.

அறிக்கையிடப்பட்ட சரக்குகளில், நிலக்கரி, இரும்பு, உருக்கு, சணல், எண்ணெய் வித்துக்கள், ஏலக்காய் இவை பற்றிய வீதங்களை, இரண்டு சதவீதத்திலிருந்து, மூன்று சதவீதமாக உயர்த்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வேர்க்கடலை மீதான வரி 1½ சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகவும், பதனிடப்படாத தோல் மீதான வரி 2 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகவும், பதனிடப்பட்ட தோல் மீதான வரி 1 சதவீதத்திலிருந்து 1½ சதவீதமாகவும் உயர்த்தப்படும்.

நெசவாலைத் தொழில் தற்போது நெருக்கடியான நிலையில் இருந்து வருவதாலும், கைத்தறிமீது அரசினருக்குத் தனிக் கவனம் உண்டாதலாலும், பருத்தி, பருத்தி நூல் மீதான வரி வீதத்தை உயர்த்துவதில்லையென முடிவு செய்துள்ளோம். இவற்றின் மீதான வரி, தொடர்ந்து 2 சதவீதமாகவே இருந்துவரும்.

ஒரு முனை விற்பனை வரிக்குட்பட்ட மற்ற பண்டங்களின் மீதான வரி வீதம் ½ சதவீதம் கூட்டப்படும்; எனினும் காபி (32-ம் இனம்), தேயிலை (36-ம் இனம்), சோப்பு (37-ம் இனம்), மண்ணெண்ணெய் (35-ம் இனம்), இரசாயன உரங்கள் (21-ம் இனம்) இவை மீதான வரி வீதங்களில் உயர்வு ஏதுமிராது.

தங்கம், வெள்ளி (Bullion) (15-ம் இனம்) விற்பனை மீதும் வரி உயர்வு இராது.

அண்டை மாநிலங்கள் சிலவற்றில் உள்ளதைப் போன்று, பலமுனை விற்பனை வரி 2½ சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக உயர்த்தப்படும்.

கோதுமை, கோதுமைப் பொருட்கள்மீது தற்போது விதிக்கப்பட்டு வரும் சலுகை வரி வீதமான 1 சதவீதத்தில் உயர்வு ஏதும் இராது.

வரி விதிப்பு, வசூலித்தல் ஆகிய எந்தக் கட்டத்திலும் மெலிந்த நிலையினரான சிறு வியாபாரிகட்கு, 'சங்கடம் விளைவிக்கக் கூடாது—சலுகை காட்டவேண்டும்' என்பதை அரசு உணர்ந்துள்ளது; ஆகவே, ஆண்டுக்கு ரூ. 10,000-க்குக் குறைவாக விற்பனையுள்ள வியாபாரிகள், விற்பனை வரி செலுத்துவதிலிருந்து தற்போது விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

பின்னர், விலக்கு எல்லைக்கு மேலாக விற்பனையளவு உயர்ந்தால், வரி விதிப்பின்கீழ் அவர்களைக் கொணரும் வண்ணம், ரூ. 7,500-க்குமேல் ரூ. 10,000-க்குள் விற்பனையுள்ள வியாபாரிகள் பதிவுசெய்து கொள்ள வேண்டியுள்ளது.

விலக்குக்கான இவ்வரம்பை உயர்த்த வேண்டுமென வர்த்தகர்களிடமிருந்து அடிக்கடி வேண்டுகோட்கள் வந்துள்ளன; இதனை ஏற்பதென அரசு முடிவுசெய்து, விற்பனை வரி விலக்குக்கான வரம்பை ரூ. 10,000-லிருந்து, ரூ. 15,000 ஆக உயர்த்த முன்வந்துள்ளது.

இதன் விளைவாக, வரி விதிப்புக்குட்பட்டோர் ஏறத்தாழ 16,000 பேர்—அதாவது, வரி விதிப்புக்குட்பட்டோரது மொத்த எண்ணிக்கையில் ஏறத்தாழ 18 சதவீதம்—வரி விலக்குப் பெறுவர்.

இதனால் ரூ. 21 இலட்சம் வருமான இழப்பு நேரிடினும், சிறு வியாபாரிகளின் நெடுநாட் கோரிக்கை ஒன்றை நிறைவேற்றி வைக்கின்றோம்.

இதையொட்டி, பதிவுசெய்து கொள்வதற்கு விலக்கு அளிக்கும் வரம்பும், ரூ. 7,500-லிருந்து ரூ. 10,000 ஆக உயர்த்தப்படும். நமது விற்பனை வரிச் சட்டம் ரூ. 50,000 வரை விற்பனையுள்ளவர்கள், சில பொது வீதங்களின்படி உடன்பட்டு வரி செலுத்த இசைவு அளிக்கின்றது.

சிறு வியாபாரிகளுக்கு நிவாரணம் தரும் வகையில், உடன்பட்டு வரி செலுத்தும் வரம்பை ரூ. 50,000-லிருந்து, ரூ. 75 000 ஆக உயர்த்தலாமென அரசு முடிவு செய்துள்ளது. சிக்கலான வரி விதிப்பு முறைகளிலிருந்து மேலும் பல சிறு வியாபாரிகட்கு நிவாரணம் தரும் வகையில் இவ்வரம்பு ரூ. 75,000 ஆக உயர்த்தப்படும்.

தற்போது பல்வேறு நிலைகளிலும் (Slabs) உடன்பட்டுச் செலுத்துவதற்கான வரி வீதம் குறிப்பிட்ட நிலையின்கீழ் அளவின் 1·2 சதவீதமாக இருக்கிறது; இது, பலமுனை விற்பனை வரி 2 சதவீதமாக இருந்தபோது முடிவு செய்யப்பட்டது.

1965-ம் ஆண்டு நவம்பர் திங்களில் பலமுனை விற்பனை வரி 2¼ சதவீதமாகவும், தற்போது 3 சதவீதமாகவும் உயர்த்தப்பட்டதனால், உடன்பட்டுச் செலுத்தும் வரி வீதங்களிலும் உயர்வு தேவைப்படுகிறது.

ரூ. 20,000-த்துக்குமேல், ரூ. 25,000-க்குட்பட்ட நிலைக்கு 1·3 சதவீதம் முதல், ரூ. 70,000-க்குமேல் ரூ. 75,000-க்கு உட்பட்ட உயர்ந்த நிலைக்கு 1·7 சதவீதம்வரை, உடன்பட்டுச் செலுத்துவதற்கான வரி வீதங்களைத் திருத்தியமைக்க அரசு முடிவுசெய்துள்ளது.

ரூ. 15,000-க்குமேல், ரூ. 20,000-க்குட்பட்ட நிலைக்கான உடன்பட்டுச் செலுத்தும் வரி வீதத்தில் மாறுதல் ஏதுமிராது.

இவ்வாறு உயர்த்தப்பட்ட வரி வீதங்களில் ஆடம்பரப் பொருட்கள், ஒருமுனை வரிப் பொருட்கள், அறிக்கையிடப்பட்ட சரக்குகள் மீதான உயர்வினை முறையான சட்டம் இயற்று முன்பாகவே தமிழக பொது விற்பனை வரிச் சட்டத்தின் 59-ம் பிரிவின்கீழ் அறிவிப்பு செய்வதன் மூலம் செயல்படுத்த முடியும்.

சமூக நலனுக்கு ஊறு விளைவிப்போர் இவ்வுயர்வினை அறிந்து, அரசின் வருமானத்துக்குக் கேடு விளைவிக்கும் வகையில் செயல்பட முயற்சிப்பதைத் தடுக்கும் வண்ணம்—ஓர் அறிவிப்பின் மூலம்—ஒருமுனை வரிப் பொருட்கள், ஆடம்பரப் பொருட்கள், அறிக்கையிடப்பட்ட சரக்குகள் இவற்றுக்கான திருத்திய வீதங்களை 1967 ஜூன் திங்கள் 18-ம் நாள் முதல் செயல்முறைக்குக் கொணர அரசு முடிவு செய்துள்ளது.

திருத்தப்பட்ட பலமுனை விற்பனை வரி வீதங்களையும், திருத்தப்பட்ட உடன்படடு வரி செலுத்தும் வீதங்களையும், சட்டமியற்றி 1967-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1-ம் நாள் முதல் செயலுக்குக் கொணர வேண்டுமென்பதே அரசின எண்ணமாகும்.

(4-ம் பக்கம் பார்க்க(

# கல்விப் பணிக்கு நிதி ஒதுக்கீடு

நடப்பு ஆண்டுத் திட்டத்தை வகுப்பதற்காகத் திட்டக் குழு வெளியிட்டுள்ள வழிகாட்டுக் கோடுகளின்படி (Guide lines) பார்த்தால், சமூகப் பணிக்குக் கொடுக்கப்பட்ட இடம் தாழ்ந்தே உள்ளது.

இருப்பினும், இத்துறையில் மேற்கொள்ள வேண்டிய பணிகளின் குறைந்த அளவுத் தேவைகளை— நடைமுறை நிலைமைக்கிணங்க—கருத்தில் கொண்டுள்ளோம்.

சமூகப் பணிகளுக்கு—குறிப்பாகப் பொதுக் ; கல்வி, பின்தங்கிய வகுப்பினர் நலன் போன்ற பணிகளுக்கு—செய்துள்ள நிதி ஒதுக்கீடுகள், சென்ற ஆண்டைவிடக் கணிசமாய் உயர்ந்திருக்கும்.

பொறுப்பேற்ற செலவினம் (Committed expenditure) உட்பட நடப்பு ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் கல்விக்கு வகை செய்துள்ள நிதி ஒதுக்கம் ஏறக்குறைய ரூ. 54 கோடியாகும்; இத்தொகை, நமது மாநில வருவாயில் 25 சதவிகிதமாகும்.

6 முதல் 11 வயது—11 முதல் 14 வயது—14 முதல் 17 வயது—ஆகிய இம்மூன்று முக்கிய வயதுத் தொகுதிகளில் உள்ள மாணவர்கள் பள்ளிகளில் கூடுதலாய்ச் சேர்வார்கள் என்பதைக் கருதி, இத்திட்டத்தில் கூடுதல் ஆசிரியர்களை அமர்த்துவதற்கும், ஏனைய பிற வசதிகளுக்கும் வகை செய்யப்பட்டுள்ளன.

பள்ளிக் கட்டிடங்கள், கருவிப் பொருள்கள், இவற்றில் போதிய வசதிகள் செய்து தருவதிலுள்ள பழந் தேக்கத்தை (back log) உளத்திற்கொண்டு, நடப்பு ஆண்டுத் திட்டத்தில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கென ரூ. 58 இலட்சமும்,-பள்ளிகளில் ஆய்வுக்கூடங்கள், விஞ்ஞானக் கருவிகள் இவற்றை வகை செய்து தருவதற்கென ரூ. 86 இலட்சமும் ஒதுக்கியுள்ளோம்.

கடந்த இரு ஆண்டுகளில் அரசு, கலைக் கல்லூரிகள் பலவற்றைத் திறந்துள்ளதால், இக்கல்லூரிகளுக்கான க[illegible] களைக் கட்டுவதற்காக ரூ. 37 இலட்சம் வகை செய்ய வேண்டியுள்ளது.

நடப்பு ஆண்டில் அரசு, மேலும் இரு கலைக் கல்லூரிகளைத் திறக்கவும், ஏற்கனவே புகுமுகக் கல்லூரி வகுப்புகளைத் தொடங்கியிருக்கிற கல்லூரிகளில் பட்டப்படிப்பு வகுப்புகளைத் தொடங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

தனியார் துறையினில், பச்சையப்பன் அற நிலையத்தார் காஞ்சீபுரத்தில் பெண்கள் கல்லூரி ஒன்றும், கடலூரில் மற்றொன்றும், சென்னையில் கலைக் கல்லூரி ஒன்றும் துவக்க ஏற்பாடு ஆகி உள்ளது.

திருச்சி மாவட்டத்தில் புத்தனாம்பட்டி நேரு பெருமகனார் பெயரிடப்பட்டுள்ள ஒரு கல்லூரியும் தொடங்கப்பெறுகிறது.

—நிதி நிலை அறிக்கையில்

**முதலமைச்சர் அண்ணா**

# ஆங்கிலம் இருக்கும் இடத்தில் இந்தி!

## 'விரைந்து புகுத்தப்படும்' என்கிறார் டில்லி அமைச்சர்

கல்கத்தா, ஜூன் 18—

"யார் என்ன நினைத்தாலும் சரி—இந்திய அரசில் இந்தியைப் பயன்படுத்துவது விரைவில் அதிகரிக்கும். பலர் கற்பனை செய்து பார்ப்பதைவிட, அதி விரைவில் அது நடந்துவிடும்.

"அரசியல் நெருக்கடி காரணமாக, தன் இயல்புக்கு மாறான

(3-ம் பக்கம் பார்க்க)

# புன்செய் நிலங்கள் அனைத்துக்கும்

அடிப்படைத்

# தீர்வை நீக்கம்

## இதனால் இழப்பு ரூ. 1 கோடி — பயன் பெறுவது 1.4 கோடி ஏக்கர்

நில வரியை நீக்குவது குறித்து அரசின் கொள்கையை விளக்கி அண்ணா அவர்கள் தமது நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டதாவது:—

இம்மன்றத்தின்முன் வரவு-செலவுத் திட்டத்தை வைக்கும்போது அறிவிப்பதாக நான் வாக்களித்திருந்த மற்றொரு பெரிய கொள்கை முடிவு, நில வரியின் எதிர்காலம் பற்றியதாகும்.

ஆட்சிப் பொறுப்பிலே இன்று அமர்ந்திருப்பவர்கள் எதிர்க்கட்சி அணியிலே வீற்றிருந்த காலத்தும், நிலவரிக் கொடுமைகளினின்றும் மக்களுக்கு உதவி அளிக்கவேண்டிய அவசியத்தைப்பற்றி அரசின் நாட்டத்தை ஈர்ப்பதில் முன் நின்றூர்கள்.

இன்றைய அரசின் கொள்கை விளக்கம் குறித்து முதன்முதலாகத் தெரிவித்த கவர்னர் பேருரையிலும், சிறு நிலக்கிழார்களுக்குப் பரிகாரம் அளிப்பதற்கான படிப்படியான திட்டம் ஒன்றை உருவாக்கப் போவதாக நாங்கள் தெரிவித்திருந்தோம்.

வரி குறைப்பு முறையாயினும்—வசதியளிப்புத் திட்டமாயினும்—சலுகைகள் தரும் முறையாயினும்—சமூகத்தில் குறைந்த வருவாய்த் துறையினரின் நலிவினைப் போக்கும் நோக்குடன் அமைத்திடுவதே சரியான 'சமூக நீதி' என இந்த அரசு திட்டமாகக் கருதுகிறது.

**தாங்கக்கூடிய தரத்தில் உள்ளவர்களுக்கும் சேர்த்து சமத்துவமாக இத்தகைய சலுகைகள் தந்திடுவது, பொருளற்ற போக்காகும்.**

**வசதி நிலையில் உள்ளோர், நாட்டின் பொது நலனுக்காகவும், நலிந்த வாழ்வினரின் நலனுக்காகவும் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்காகும் செலவுத் தொகையில் ஒரு கணிசமான பகுதியைத் தந்துதவும் பொறுப்பை மேற்கொள்வதை, 'பாரம்' என்று கருதாது 'அறம்', 'பொறுப்பு' என்று கருதிட வேண்டுகிறேன். நல்லோர் அங்ஙனமே கருதுகின்றனர்.**

நிலவரி நீக்கம் பற்றிய அதன் எல்லாக் கூறுகளையும் ஆராய்வதற்கென முந்தைய அரசு நியமித்த சிறப்பு அலுவலரின் பரிவுரைகளையொட்டி, நடப்பு ஆண்டில் தனக்குள்ள இடர்மிகுந்த வரவு-செலவுத் திட்டச் சிக்கல்களிடையிலும், தங்கள் கொள்கையை எந்த அளவிற்குத் திறம்படச் செயல்படுத்தலாம் என்பது குறித்து அரசு ஆலோசனை செய்தது.

தமிழகச் சட்டமன்றத்தில் நிலவரிகுறித்து முன்னாள் முதலமைச்சர் அவர்கள் விடுத்த விவர அறிக்கையில்—ஓரளவிற்குச் சிறப்பு அலுவலரின் ஆய்வு வரம்பாகவும் அமைந்திருந்த அவ்வறிக்கையில், பாசனத் திட்டங்களில் செய்துள்ள பெரும் முதலீடுகளிலிருந்து ஓரளவு பயன்பெறும் வகையிலும், பாசன வசதிகளையும் வாய்க்கால் ஏற்பாடுகளையும் திறம்படப் பேணிவருவதற்கான செலவினங்கள் உயர்ந்துள்ளதை ஈடுகட்டும் வகையிலும், தண்ணீருக்கான தீர்வை தொடர்ந்து செலுத்தப்பட வேண்டுமெனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஊராட்சி மன்றங்களுக்கு, நிலத்தின் மீதான தீர்வைகளே மு[illegible]மையான வரவினமாகத் தொடர்ந்து நீடிக்குமென்றும் ஒப்புக்கொ[illegible]ப்பட்டது.

எனவே, புன்செய் நிலங்களுக்குரிய அடிப்படைத் தீர்வையும், நன்செய் நில மொத்தத் தீர்வையில் அடங்கியுள்ள அடிப்படை நில வரியையும் எவ்வகைச் செவ்விய முறையில் நீக்கலாம் என்பதை ஆராயும்படியே சிறப்பு அலுவலர் கேட்கப்பட்டிருந்தார். இவ்வாறு இலக்கணம் கூறப்பட்ட அடிப்படை நில வரியை நீக்கும் திட்டத்துடன், வேளாண்மை விளைபொருட்களில் அரசு வாணிபம் நடத்தும் திட்டமும் அப்போது இணைக்கப்பட்டிருந்தது.

இக்கேள்வியைக் குறித்து ஆராய்ந்த சிறப்பு அலுவலரும், நன்செய் நிலத்திற்கான மொத்தத் தீர்வையிலிருந்து நிலத்தின் அடிப்படைத் தீர்வையைப் பிரிப்பதில் உள்ள சிக்கலை எடுத்து விளக்கியுள்ளார்.

புன்செய் நில அடிப்படைத் தீர்வையையும், நன்செய் நில மொத்தத் தீர்வையையும் அகற்றிவிட்டு, பாசன வசதிகளின் வகைப்பாட்டிற்கிணங்கத் தண்ணீர்த் தீர்வை மட்டும் விதிப்பதற்குப் புதிய சட்டம் இயற்றுவதன் வாயிலாகவே முந்தைய அரசின் நோக்கத்தை நிறைவேற்ற முடியும் என்று அவருடைய பரிவுரை சாற்றுகிறது.

சிறப்பு அலுவலர் கருதியுள்ளபடி, தண்ணீர்த் தீர்வை வீதங்களை ஒழுங்குபடுத்தும்போது, சில பகுதிகளில் தற்போது நிலவிவரும் தண்ணீர்த் தீர்வை வீதங்களை உயர்த்த வேண்டிவரும். எனவே, இதனை விழிப்புடனும் விரிவாகவும் பரிசீலனை செய்யவேண்டியுள்ளது.

ஆனால், அதே சமயத்தில் சிறப்பு அலுவலரின் அறிக்கைப்படி, தண்ணீர்த் தீர்வை வீதங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் கூடவே சட்டமியற்றினால் அல்லாது, நன்செய் நில மொத்தத் தீர்வையை தள்ளுபடி செய்வதோ, அகற்றுவதோ இயலாதென்பது தெள்ளிதின் விளங்கும்.

நன்செய் நிலமெனப் பதிவாகியுள்ள நிலங்களைப் பொறுத்தமட்டில்—இதில் சிக்கல் மலிந்திருப்பதால், இதனை நன்கு ஆராய்ந்து எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவாக அரசிற்கு ஓர் அறிக்கை அனுப்புவதற்காக வல்லுநர் குழு ஒன்றை அமைக்க அரசு கருதுகிறது. இது குறித்துச் சட்டப் பேரவை உறுப்பினர்களையும் கலந்து, இக்குழுவின் அறிக்கையை ஆராய்ந்த பின்னர் இறுதி முடிவுகள் எடுக்கவேண்டும் என்பதே அரசின் விருப்பமாகும்.

இதற்கிடையில், தற்போதைய நில வரி ஏற்பாட்டின் பிணைப்பிலிருந்து மக்களில் பலருக்கு இயன்ற அளவுக்கு விலக்களிக்க வேண்டுமென்ற தனது கொள்கைக்கிணங்க, புன்செய் எனப் பதிவாகியுள்ள அனைத்து நிலங்களுக்குமுரிய அடிப்படை தீர்வையை 1967 ஜூலை 1-ந் தேதியன்று தொடங்கும் பசலியிலிருந்து விட்டுவிட அரசு முடிவு செய்துள்ளது.

அதே நேரத்தில், புன்செய் எனப் பதிவு செய்யப்பட்டிருந்து அரசின் பாசன ஆதாரங்களிலிருந்து பயன்பெறும் நிலங்கள், முன்பே குறிப்பிட்டுள்ள வீதங்களில் தொடர்ந்து தண்ணீர்த் தீர்வை செலுத்தி வரவேண்டும்.

புன்செய் நிலங்களுக்கென பஞ்சாயத்து ஒன்றியங்களுக்குச் செலுத்தவேண்டிய உள்ளாட்சி செஸ் வரியும், செஸ் மேல் வரியும் வசூலிக்கப்படும்.

புன்செய் நிலங்களுக்குரிய அடிப்படைத் தீர்வையை விட்டுவிடுவதால், ஒரு முழு ஆண்டில் ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்படுமென்று மதிப்பிடப்படுகிறது. இதில், நடப்பு ஆண்டில் மட்டும் ஒரு கோடி ரூபாய்க்குக் குறையாமல் இழப்பு ஏற்படும்.

இம்முடிவு காரணமாய் அரசுக் கணக்குகளில் புன்செய் எனப் பதிவாகியுள்ள சுமார் 1 கோடியே 40 இலட்சம் ஏக்கர் நிலங்களுக்கு வரி விலக்குக் கிட்டும்.

நமது மாநிலத்தில் 'தனிப் பட்டா'—'கூட்டுப் பட்டா' ஆகிய இவை இரண்டும் சேர்ந்த ஏறக்குறைய 60 இலட்சம் பட்டாக்களில், சுமார் 45 இலட்சம் பட்டாக்களாவது புன்செய் நிலங்களென நாம் மதிப்பிடலாம்.

எனவே, அரசு மேற்கொள்கிற இம்முடிவு காரணமாக, உழவர் பெருமக்களில் மிகப் பெரும் பகுதியினர் பயனடைவார்களென நம்புகிறேன்.

இதன் விளைவாக, கரும்பு—மஞ்சள்—பாக்கு போன்ற மிக ஆதாயம் தரும் வாணிபப் பயிர்களை விளைவிப்போர் உட்படப் பல பெருநிலக்கிழார்களும் பயனடைவார்கள் என்பதிலும் ஐயமில்லை.

வரவினமும் செலவினமும் ஊசி முனையிலே சமன் செய்யப்படும் இடர்பாடான இவ்வேளையில், வருவாய் எத்தலைப்பில் குறைந்தாலும், அந்த இழப்பை வரியை உயர்த்துவதன் மூலமாகவோ, அல்லது பலன் தரும் செலவினங்களைக் குறைத்துக் கொள்வதன் வாயிலாகவோ, ஏனைய மக்கட் பிரிவினரின் மீதுள்ள சுமை சிறிது கூடுமென்பதை மாண்புமிகு உதுப்பினர்கள் உணருவார்களென்று நினைக்கிறேன்.

எனவே, மக்களிடையே ஒரு பிரிவினருக்குப் பரிகாரம் அளிக்கும்போது, அதன் விளைவால் ஏற்படும் சுமையினைத் தாங்கக்கூடிய நிலையிலே உள்ள ஏனைய மக்களின்மீது வைத்தல் வேண்டும் என்பதே அரசின் முயற்சியாக இருத்தல் வேண்டும்.

இக்கருத்தின் அடிப்படையில்தான் அரசு நில வரியை நீக்குவதுடன் கூடவே, பெருநிலக்கிழார்களும் நாட்டு நலனிற்காகச் சற்றுக் கூடுதலான சுமையினை ஏற்கும்படி அவர்களைக் கேட்க வேண்டுமெனக் கருதியுள்ளது.

நில வரி நீக்கம் காரணமாக ஏற்படும் வருமான இழப்பினை, வேளாண்மை விளைபொருள்களில் அரசு வாணிபம் செய்து ஈடுசெய்ய வேண்டுமென முந்திய அரசு கருதியிருக்கிறது.

வருவாய் இழப்பினை ஈடு செய்யும் ஒரே நோக்கத்துடன் மட்டும் அரசு வாணிபத் துறையில் ஈடுபட்டால், உழவர்களுக்கு, குறிப்பாகச் சிறு உழவர்களுக்கு இன்னல் விளையும்; அல்லது மாறாக, நகர மாந்தருக்குக் கூடுதல் சுமைகள் ஏற்படும்.

எனவே, நில வரி நீங்கக் காரணமாய் ஏற்படும் வருவாய் இழப்பினை பெருநிலக்கிழார்களிடமிருந்து ஓர் அளவிற்கு ஈடு செய்வது அதனைவிட நியாயமானதென்று நாங்கள் கருதுகிறோம்.

---

### ஆட்சி மொழி மசோதா-பல மாநிலங்கள்

### கருத்தறிவிக்காததன் எதிரொலி

## அண்ணா திட்டவட்ட அறிவிப்பு

புதுடில்லி, ஜூன் 18—

மத்திய அரசிலிருந்து மாநில அரசுகளுக்கு அனுப்பப்பட்ட ஆட்சி மொழி நகல் மசோதா குறித்துத் தமிழக முதலமைச்சரைத் தவிர வேறு எந்த மாநில முதலமைச்சரும் தங்களின் கருத்தை இதுவரை தெரிவிக்கவில்லை; அதனால், ஆட்சி மொழி மசோதா, நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு இன்னம் சில கிழமைகள் சுணக்கமாகலாம் எனத் தெரிகிறது.

மற்ற மாநில அரசுகள், ஆட்சி மொழி மசோதா மீதான தங்களின் கருத்துக்களை ஏன் தெரிவிக்கவில்லை என்பது தெரியவில்லை.

## அண்ணா கருத்து

மத்திய உள்துறை அமைச்சகத்திற்குத் தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள், ஆட்சி மொழி நகல் மசோதாமீது கருத்தறிவித்துள்ளதாவது:—

**"ஆங்கிலம் தொடர்ந்து துணை ஆட்சிமொழியாக இருக்க இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தினால் அல்லாது தமிழக அரசு மனநிறைவு கொள்ளாது."**

இந்தக் கருத்தை, டில்லியில் தலைமை அமைச்சர் இந்திரா காந்தியை அண்மையில் சந்தித்த போதும் முதலமைச்சர் அண்ணா அவர்கள் வலியுறுத்தி வந்தது நினைவுகூரத்தக்கது.

அடுத்த மாதம் ஆட்சி மொழி மசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டியிருப்பதால், கூடியவிரைவில் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

## பள்ளிப் பிள்ளைகளுக்கு மதிய உணவு

### 'கேர்' திட்டத்திற்குத் தமிழக அரசு ஒப்புதல்

"பள்ளிப் பிள்ளைகளின் மதிய உணவுத் திட்டத்திற்காகத் தொடர்ந்து துணைநின்றுவரும் 'கேர்' (Care) அமைப்பினர், அதே திட்டம் மேலும் செம்மைப் படுத்தப்படுவதற்கான முறையில், 'பொது சமையல் இடம்' அமைப்பது என்றும், படிப்படியாக அந்த இடம், மதிய உணவுக்குத் தேவைப்படும் காய்கறிகளுக்காகத் தோட்டமாக ஆக்கப்பட வேண்டுமெனவும் புதிய திட்டம் தந்துள்ளனர்.

"இதனை முதலில் பூவிருந்தவல்லிப் பகுதியில் செயல்படுத்திப் பார்த்திட அரசு ஒப்புதல் அளித்து, அதற்கான ஏற்பாட்டினை மேற்கொண்டிருக்கிறது.

"பயன் அளவிடப்பட்டு, பிறகு இதே முறை, தமிழகத்தின் மற்றப் பகுதிகளுக்கும் விரிவாக்கப்பட இயலும்."

—நிதி நிலை அறிக்கையில்

**முதலமைச்சர் அண்ணா**

---

# மேயர் குழுவினர் மாஸ்கோ பயணம்

சென்னை, ஜூன் 19—

சோவியத் இரஷ்யா முதலான மேலை நாடுகளுக்குச் செல்லும் சென்னை மேயர் குழுவினர் இன்று காலை விமான மூலம் பயணமாயினர்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அமைச்சர்கள், மற்றும் கழக முக்கியத் தோழர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி உறுப்பினர்கள் உட்பட ஏராளமானோர் கூடியிருந்து வழியனுப்பி வைத்தனர்.

மேயர் இரா. சம்பந்தம், மாநகராட்சி ஆளுங்கட்சித் தலைவர் வி. முனுசாமி, மத்தியக் குழுத் தலைவர் சா. கணேசன், முன்னாள் மேயர் வி. கிருஷ்ணமூர்த்தி, எதிர்க் கட்சித் தலைவர் எஸ். ஜி. விநாயகமூர்த்தி, துணைத்தலைவர் குப்புசாமி, முஸ்லிம் லீக் தலைவர் காஜா மொய்தீன் ஆகியோர் மேயர் குழுவில் உள்ளனர்.

இவர்கள் புதுடில்லிக்குச் சென்று அங்கிருந்து மாஸ்கோவுக்குப் பயணமாகின்றனர்.

பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், அனைவருக்கும் மாலையணிவித்து வாழ்த்தி வழியனுப்பிவைத்தார்.

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும் வந்திருந்து அனைவருக்கும் மாலையணிவித்தார்.

அமைச்சர்கள் ஏ. கோவிந்தசாமி, சாதிக் பாட்சா, முத்துசாமி ஆகியோரும் விமான நிலையத்திற்கு வந்திருந்து வழியனுப்பினர்.

மற்றும் பல கிளைக் கழகங்கள்—துணை மன்றங்கள் சார்பிலும், தனிப்பட்ட முறையிலும் நூற்றுக்கணக்கானவர்கள் மலர் மாலைகள் அணிவித்து வாழ்த்தியும், கை குலுக்கியும் வழியனுப்பினர்.

விமான நிலையத்திற்கு வந்திருந்த முக்கியத் தோழர்கள்:—

மாவட்டச் செயலாளர் நீல நாராயணன், துணைச்செயலாளர் சு. பாலன், பொருளாளர் டி. கே. கபாலி, முன்னாள் மேயர் மைனர் மோசஸ், முன்னாள் துணை மேயர்கள் ஏ. ஏ. கபாலமூர்த்தி, மு. வேதாசலம் எம்.எல்.ஏ., என். எஸ். தேவராசன், இரா. சடகோபன், மாநகராட்சி ஆணையாளர் அம்பாசங்கர், மற்றும் மாநகராட்சி அதிகாரிகள், துணை-மேயர் கிருஷ்ணமூர்த்தி, வளையாபதி முத்துக்கிருஷ்ணன், முத்துராமலிங்கம், கவிஞர் வேழவேந்தன் எம்.எல்.ஏ., செ. கோ. விசுவநாதன் எம்.எல்.ஏ., மாநகராட்சி உறுப்பினர்களான பாஸ்கரன், சைதை சம்பந்தம், பவளவண்ணன், மோகனரங்கம், ஏசுதாசன், எம். கோபால் எம்.எல்.ஏ., மு. அரங்கநாதன், நல்லதம்பி, ஆர்ட் டைரக்டர் அங்கமுத்து, சி. என். ஏ. பரிமளம், ஏ. பி. சனார்த்தனம், தோழியர்கள் வெற்றிச்செல்வி அன்பழகன், குப்பம்மாள், மணிவண்ணன், என். வி. என். சோமு, மா. செங்குட்டுவன், எம். குமார், க. துரை, ஏ. எஸ். இராமன், சோ. கி. மூர்த்தி, வழக்கறிஞர்கள் வேலூர் நாராயணன், ந. கணபதி, முத்தலீப், தோழர் எஸ். இராகவானந்தம், மற்றும் பலர்.

### க. அன்பழகன் பயணம்

மேயர் குழுவினருடன் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும் அதே விமானத்தில் மக்களவைக் கூட்டத்தில் கலந்துகொள்ள புதுடில்லிக்குப் பயணமானார்.

---

## ஆங்கிலம் இருக்கும்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இடத்தில் ஆங்கிலம் இருந்து வருகிறது. அது வகித்துவரும் இடத்திற்கு முடிவு கட்டப்படும்"

என்று மத்திய கல்வித்துறை அமைச்சர் திரிகுண சென் கூறினார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:—

"ஏற்கனவே இந்தி ஆட்சி மொழியாகிவிட்டது. மற்ற மாநிலங்கள் இந்தியை ஆட்சி மொழியாக ஒப்புக்கொள்ளும் காலம் வரை ஆங்கிலம் துணை ஆட்சி மொழியாக இருக்கும்.

# வரி ஏய்ப்பைத் தடுத்து...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மேற்சொன்ன செயற் குறிப்புகளின் மூலம்—தமிழகப் பொது விற்பனை வரியின் கீழும், மத்திய விற்பனை வரியின் கீழுமாக இவ்வாண்டில் மூன்று கோடியே இருபத்தைந்து இலட்சம் ரூபாய் கூடுதல் வருமானம் கிட்டுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## பஸ்கள் மீதான வரி மாற்றியமைப்பு

கூடுதல் நிதி வசதிகளைத் திரட்டும் நம் முயற்சியில் அடுத்த செயற் குறிப்பு, தமிழக மோட்டார் வண்டி வரிச் சட்டத்தின்கீழ் பஸ்களின் மீது விதிக்கப்படும் மோட்டார் வண்டி வரியை மாற்றியமைப்பதைப் பற்றியதாகும். அன்றுடம் சென்றுவரும் வழித்தடத்தின் நீளத்தையொட்டி, தற்போது பின் வருமாறு வரி விதிக்கப்படுகிறது :—

| | |
|---|---|
| ஒரு நாளைக்கு 210 கிலோ மீட்டருக்கு மேற்படாதிருப்பின் | ரூ. 35 |
| 210 கிலோ மீட்டருக்குமேல், 270 கிலோ மீட்டருக்கு மேற்படாது இருப்பின் | ரூ. 40 |
| 270 கிலோ மீட்டருக்கு மேல் | ரூ. 45 |

210 கிலோ மீட்டருக்குக் குறைவாக ஓடும் பஸ்களின் எண்ணிக்கை, அதிலும் குறிப்பாக நகருக்கு வெளியே உள்ள பகுதிகளில் இவ்வாறு ஓடும் பஸ்களின் எண்ணிக்கை மிகக் குறைவே, பஸ்களில் பெரும்பாலானவை ஏற்கனவே ஒரு நாளுக்கு 270 கிலோ மீட்டருக்குமேல் ஓடிக்கொண்டிருக்கின்றன.

இதனைக் கருத்திற் கொண்டு, கூடுதல் நிதி வசதி திரட்ட வேண்டிய தன் பொருட்டு பின்வருமாறு இவ்வீதங்களை மாற்றியமைக்க அரசு முடிவு செய்துள்ளது :—

நாளொன்றுக்கு 270 கிலோ மீட்டரோ, அதற்குக் குறைவாகவோ இருப்பின் ரூ. 50.

நாளொன்றுக்கு 270 கிலோ மீட்டருக்கு மேற்படின் ரூ. 55.

நகர பஸ் போக்குவரத்து, மற்ற பஸ்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கின் அவ்வளவு ஆதாயம் தரக்கூடியதில்லையாதலால் அவற்றுக்கான வரி வீதங்களில் மாறுதல் ஏதுமிராது.

சாதாரண பஸ்கள் ஓடக்கூடிய உயர்மட்ட அளவு 200 மைல்களிலிருந்து 250 மைல்களாக உயர்த்தப்பட்டு தமது வருவாய் வளர்ந்திட வழிசெய்தளிக்க வேண்டும் என்ற முறையீட்டைக் கருத்தில் கொண்டு, செய்யப்பட்ட முதலீட்டிலிருந்து இன்னும் சிறந்த முறையில் பயன்பெறத் தக்கவாறு, நாளொன்றுக்கு ஓடக்கூடிய உயர் மட்ட அளவை 200 மைல்களிலிருந்து 250 மைல்களாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

இம்முடிவு, எல்லாப் போக்குவரத்து நிறுவனங்களின் ஆதாய வாய்ப்பினைப் பெரும் அளவில் உயர்த்தி, கூடுதல் வரி விதிப்பின் பொறுப்பினை ஏற்பதில் இடர் அதிகமிராதிருக்க வழிகோலும்.

இப்புதிய விகிதங்கள், 1967-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1-ம் நாள் முதல் செயலுக்குக் கொணரப்படும். எனவே, இந்நிதியாண்டின் மூன்று காலாண்டுகட்கு மட்டுமே இவை பொருந்தி வரும்.

இவ்வாண்டில், இதன் மூலம் கிடைக்கக்கூடிய கூடுதல் வருமானம், ரூ. 90 இலட்சம் ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 700 கிலோ கிராமும், அதற்குக் குறைவாகவும் தன் எடை (unladen weight) கொண்ட மோட்டார்கார்களுக்கான காலாண்டு வரியை ரூ. 21-லிருந்து ரூ. 80 ஆகவும், 700 கிலோ கிராமுக்கு மேற்பட்டு 1,500 கிலோ கிராமுக்கு மேற்படாத தன் எடை கொண்ட கார்களுக்குக் காலாண்டு வரியை ரூ. 80-லிருந்து ரூ. 40 ஆகவும், 1,500 கிலோ கிராமுக்கு மேற்பட்ட தன் எடையுள்ள கார்களுக்கான வரி வீதங்களை இதையொத்த முறையில் உயர்த்துவதெனவும் அரசு முடிவு செய்துள்ளது.

மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள், முச்சக்கர வண்டிகள் மீதான வரி வீதங்களில் உயர்வேதும் இராது.

1967-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1-ம் நாள்முதல் செயல்படத் துவங்கும் இத்மாற்று வீதங்களின்படி, இவ்வாண்டில் ரூ. 10 இலட்சம் கூடுதல் வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது.

நம் நாட்டில் தயாரிக்கப்படும் மதுவகைகள் மீதான ஆயத் தீர்வையையும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அயல் ரக மதுவகைகள் மீதான விற்பனை வரியையும் உயர்த்துவதென்றும் அரசு முடிவு செய்துள்ளது.

நம் நாட்டிலேயே தயாரிக்கப்படும் மதுவகைகள்மீது ஒரு லிட்டர் சாராயச் சத்துக்கு ரூ. 8 வீதம் ஆயத் தீர்வை தற்போது விதிக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களில் விதிக்கப்படும் ஆயத் தீர்வையுடன் ஒப்பிடும்போது இது மிகக் குறைந்ததே.

எனவே, தமிழக மதுவிலக்குச் சட்டத்தின் 18-(A) பிரிவின்படி, மதுவகைகளின்மீது விதிக்கப்படுகின்ற ஆயத் தீர்வையை ஒரு லிட்டர் சாராயச் சத்துக்கு ரூ. 18 என்று உயர்த்த எண்ணியுள்ளோம்.

1937-ம் ஆண்டு தமிழக மதுவிலக்குச் சட்டத்தின் 21-(A) பிரிவின்கீழ், மதுவகைகளின் விற்பனை விலைமீது ரூபாய்க்கு 50 காசு என்ற வீதத்தில் விற்பனை வரி விதிக்கப்படுகிறது.

உள்நாட்டில் தயாரிக்கப்படும் அயல் ரக மதுவின்மீது ஆயத் தீர்வையைக் கூட்டியிருப்பதையடுத்து, இறக்குமதி செய்யப்படும் மதுவகைகள் மீதான விற்பனை வரியையும் ரூபாய்க்கு 50 காசிலிருந்து ரூபாய்க்கு 75 காசாக உயர்த்த எண்ணியுள்ளோம். இவற்றால், இவ்வாண்டில் ரூ. 10 இலட்சம் கூடுதல் வருமானம் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தமக்கிருக்கும் குறைந்த அதிகாரங்களைக் கொண்டு, கூடுதல் நிதி வசதிகளைத் திரட்ட இங்ஙனம் முயற்சி எடுப்பதுடன், தற்போது செயல்பட்டுவரும் வரி விதிப்புகளின்கீழ் ஏய்த்தல் நடைபெறுவதைத் தடுப்பதன் தேவையையும் அரசு நினைவிற் கொண்டுள்ளது.

சம்பந்தப்பட்ட சொத்துக்களைக் குறைத்து மதிப்பிடுவதன்மூலம், இயங்காச் சொத்துக்களின் விற்பனை மீதான முத்திரைக் கட்டண ஏய்ப்பு பரவலாக நடைபெற்றுவருவது அவையோர் நன்கறிந்ததே.

1899-ம் ஆண்டின் இந்திய முத்திரைத் தாள் சட்டத்தின் முதல் அட்டவணையின் 23-ம் பிரிவின்படி, எந்த விலைக்கு விற்கப்பட்டதாகப் பத்திரத்தில் கூறப்பட்டுள்ளதோ அதன் அடிப்படையிலேயே முத்திரைக் கட்டணம் விதிக்கப்பட வேண்டும்.

பெரும்பாலான தருணங்களில் உண்மை விலையோ, அல்லது எதன் பொருட்டு விற்கப்படுகின்றதோ அதன் உண்மையான மதிப்போ, பத்திரத்தில் குறிப்பிடப்படுவதில்லை என்று தெரிகிறது.

முறைப்படி வரவேண்டிய முத்திரைக் கட்டணத்தை ஏய்ப்பதற்காக இவ்வாறு குறைத்து மதிப்பிடல், அரசுக்குப் பெருத்த வருமான இழப்பினை ஏற்படுத்துகின்றது.

64-ம் சட்டப் பிரிவின்கீழ் தற்போது தண்டம் விதிப்பதற்கான விதிமுறைகளும் இதனைத் தடுப்பதில் பயன் அளித்தபாடில்லை.

எனவே, தக்க சட்ட அறிவுரைபெற்ற பின்னர், முத்திரைக் கட்டணத்தைச் சொத்தின் நிலவர விலையைப் (market value) பொறுத்து விதிப்பதற்கேற்ப சட்டமியற்ற அரசு முடிவு செய்திருக்கிறது.

இதன்மூலம், குறைத்து மதிப்பிடல் மிக அதிகமாக உள்ளதாகத் தோன்றினல், பதிவுத் துறையினா சார்பற்ற பிற விவரங்களிலிருந்து தனியே நிலவர விலையை அறிந்து, செலுத்தாமல் விட்டுவிட்ட கட்டணத்தைப் பெற வாய்ப்பு ஏற்படும்.

இதற்கான சட்ட வரைவு இப்போது முடிவு செய்யப்பட்டு, இந்தக் கூட்டத் தொடரிலேயே, சட்டமன்றத்தின்முன் வைக்கப்பெறும்.

பத்திரம் ஒன்று பதிவுக்கு வரும்போது, அதில் சொத்தின் உண்மை நிலவர விலை குறிப்பிடப்படவில்லையெனப் பதிவு அதிகாரி கருதினல், அதனைப் பதிவு செய்தபின் நிலவர விலையை முடிவு செய்வதற்காகக் கலெக்டருக்கு அதனை அனுப்பிவைக்கலாம்; கலெக்டர் தொடர்புடையவர்களுக்கு தக்க முறையில் அறிவித்த பின்னர், நிலவர விலையையும் அதன் மீதான முத்திரைக் கட்டணத்தையும் முடிவு செய்வார். கலெக்டரின் இவ்வுத்தரவின்மீது நீதித் துறைக்கு மேன் முறையீடு செய்ய வாய்ப்பு அளிக்கப்படும்.

நீதித் துறைக்கு மேன்முறையீடு செய்ய வாய்ப்பு இருப்பது, நிலவர விலையை நிர்வாகத்தினர் தன் போக்காக முடிவு செய்யக் கூடியதைத் தடுப்பதுடன், முறையான வருமானத்தை அரசு பெறவும் வழி செய்யும், பரிசு—பரிமாற்றம் செய்தல்—இவற்றிற்கும் இவ்விதிகள் பொருந்தும்.

முத்திரைக் கட்டணம் செலுத்துவதில் ஏய்ப்பைத் தடுக்கும் இந்நடவடிக்கைகளின் பலனுகக் கிடைக்கக்கூடிய கூடுதல் வருமானத்தை மதிப்பிடுவது கடினமே யெனினும், ஒரு முழு ஆண்டில் ஒரு கோடி ரூபாய்க்குமேல் கூடுதல் வருமானமும், இவ்வாண்டில் ஏறத்தாழ ரூ. 90 இலட்சமும் கிடைக்குமென எதிர்பார்க்கலாம்.

—தமிழக 1967—68-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில்
**முதலமைச்சர் அண்ணா**

# தீக்குளித்த தியாகிகட்கு உதவி உண்டா?

சென்னை, ஜூன் 20—

இன்று சட்டமன்றத்தில் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்கட்கு உதவிப் பணம் கொடுப்பது பற்றிய கேள்விக்கு அளிக்கப்பட்ட பதிலையடுத்துப் பல துணைக் கேள்விகள் எழுந்தன; அப்போது, 'தீக்குளித்த தியாகிகட்கும் தியாக மானியம் வழக்கப்படுமா?' என்று கழக உறுப்பினர் எம். எஸ். மணி கேட்டார்.

அதற்குப் பதிலளித்த முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது :—

"தீக்குளித்து உயிரை மாய்த்துக் கொண்டவர்கள் மொழிப் போராட்டத் தியாகிகள் ஆவர். அவர்களைத் தமிழ்ச் சமுதாயமே காப்பாற்றும். அப்படிப்பட்ட தியாகிகளின் குடும்பத்தவர் இப்படிப்பட்ட உதவியைக் கோர மாட்டார்கள் என்பதே எனது நம்பிக்கை."

எம். எஸ். சிவசாமி:—"தியாகிகளுக்குக் கொடுக்கப்பட்ட மானியத்தை விற்கலாமா? குத்தகைக்கு விடலாமா?"

அண்ணா:— "விற்கக் கூடாது என்று விதி இருக்கிறது. விதி மீறப்பட்டால்—அதைக் கவனத்துக்குக் கொண்டுவந்தால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்."

## பெரியாருக்குத் தியாக மானியம்

முனு. ஆதி:—"வைக்கம் வீரரான பெரியார் ஈ. வெ, ரா. அவர்கட்கும் தியாக மானியம் வழங்கப்படுமோ?

அண்ணா:— "பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் தியாகத்துக்குத்தான் இந்த அமைச்சரவையே மானியமாகத் தரப்பட்டிருக்கிறதே!"

காங்கிரசு உறுப்பினர் கேள்வி:—"தியாக மானியம், வேண்டுமென்றே காலதாமதம் செய்யப்படுவதாகக் கூறப்படுகிறதே—விரைந்து கொடுக்கப்படுமா?"

அண்ணா :—இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தவர்களே காலதாமதம் செய்ததாக எடுத்துக் கூறப்பட்டதற்கு 'என் நன்றி!"

கேள்வி :—"தியாக மானியம் கொடுக்கும் திட்டம், பதினெட்டு ஆண்டுக்குப் பிறகு சென்ற அக்டோபரில்தான் கொண்டுவரப்பட்டது; ஏன் இவ்வளவு காலதாமதம்?"

பதில் :—"தியாகத்தைப் பற்றி அறிந்துகொள்ளமுந்தியஅரசுக்கு அவ்வளவு காலம் பிடித்திருக்கிறது என்று நினைக்கிறேன்."

கருத்திருமன் :—"தியாக மானியம் வழங்குவது விரைவுபடுத்தப்படுமா?"

அண்ணா :—"முந்திய அரசை விட வேகமாகவே இந்த அரசு செல்லும்."

அரங்கண்ணல் :—"வாஞ்சிநாத ஐயரின் குடும்பத்தார் கோரியிருந்த தியாக மானியம் அனுமதிக்கப்பட்டதா?"

அண்ணா :—"வாஞ்சிநாத ஐயரின் மனைவி, தியாக மானியம் கோரி மனுச் செய்திருந்தார். முந்திய அரசு, அதை அனுமதிக்கத் தயங்கிக்கொண்டிருந்தது; 'வாஞ்சிநாத ஐயர் செய்தது தியாகமே' என்று ஒப்புக்கொள்ள முன்னைய அரசு தயாராயில்லை — தயங்கியது; வாஞ்சிநாத ஐயர் ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தாமும் தற்கொலை செய்து கொண்டார்; தன்னைத் தானே மாய்த்துக் கொண்டதால், அதைத் தியாகமாகக் கருத முந்திய அரசு மறுத்தது; ஆனலும் போனவாரத்தில் நான் அந்தக் கோரிக்கைமனுவை ஏற்றுக் கொண்டு உதவி வழங்க உத்தரவிட்டேன். அவர் தற்கொலை செய்துகொண்டபோதிலும்'அவருடைய உள்நோக்கம்,சுதந்தரப் போராட்ட உணர்ச்சியே' என்பதை எண்ணித்தான், அதையும் தியாகமாக ஏற்று நான் உத்தரவிட்டேன்."

ஏ. கே. சுப்பையா :—"எந்தக் கட்சியில் இருப்பவர்களானலும் தியாக மானியம் வழங்கப்படுமா?"

அண்ணா :—"இதில் கட்சிப் பாகுபாட்டுக்கே இடமில்லை."

## நடக்க இருப்பவை

### 21--6--67

**சென்னை 94-வது வட்டம்**

சி.பி. சிற்றரசு மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு போக் ரோடு திடலில்; தலைவர்: இரத்தினம்; பேசுவோர்: அமைச்சர் எஸ்.ஜே. சாதிக்பாட்சா, ஏ வி.பி. ஆசைத்தம்பி எம்.எல்,ஏ., இரா. சடகோபன் எம்.சி., வை. பாலசுந்தரம்.

### 22--6--67

**குடியேற்றம்—பிச்சனூர்**

தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு வரதராசப் பெருமாள் கோவில் தெருவில்; தலைவர்: ஏ. அண்ணுமலை; பேசுவோர்: கேரளீயன், மற்றும் பலர்.

FACTORY SPACE FOR AGRO BASED INDUSTRIES

Available at Ambattur

A few factory sheds from 2,50 sq ft. to 6, 00 sq ft available at the Ambattur Industrial Estate for Food and Fruit Based Industries only.

Apply :—

Director of Industries and Commerce,
Chepauk, Madras-5
Phone : 87606

## சட்டமன்றத்தில் அண்ணா பதில்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அதற்குத் தேவையான பணத்தை மக்களிடமிருந்தே திரட்டலாமே!"

அண்ணா:—"இதில் இரண்டு அம்சங்கள் உண்டு; ஒன்று—ஐந்தாண்டுத் திட்டத்தில் சகல பகுதிகளிலும் ஒரே சீராகத் தொழில்களைத் துவங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை மக்களுக்கு நாம் அறிவித்தாக வேண்டும்; இரண்டாவது:—மத்திய அரசு, 'முடியாது' என்று சொல்லிவிட்டால் நாம் எடுத்து நடத்துவது பற்றி யோசிக்கலாம். மத்திய அரசு இன்னும் திட்டவட்டமாகத் தனது முடிவை அறிவிக்கவில்லை.

"மாநிலங்களுக்கிடையே சமநிலையற்ற கொள்கையைப் பின்பற்றுவதன்மூலம், மத்திய அரசு தவறு செய்துவருகிறது என்பதை, பொதுமக்கள் அறியச் செய்யவேண்டும்.

"நாம் இப்போதே அந்தத் திட்டத்தை ஏற்று நடத்தத் துவங்கினல், 'இதனை மத்திய அரசே ஏற்ருலும் ஏற்றிருக்கக் கூடும். அதை இவர்கள் ஏற்று நடத்துவதற்கு பதில் வேறு காரியங்களில் ஈடுபட்டிருக்கலாமே' என்று பொதுமக்கள் நம்மைப் பற்றிக் கருதக்கூடும்.

"நாம் செய்வதில் எவ்வளவு நியாயம் இருக்கிறது; மத்திய அரசு எவ்வளவு கவனக்குறைவாக — தவருக நடந்துகொள்கிறது என்பதை மக்கள் உணர வேண்டும்."

ஆலடி அருணா கேள்விக்கு அண்ணா பதிலளித்ததாவது :—

"கருநாடம், ஆந்திரம், தமிழகம் ஆகிய மூன்று மாநிலங்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்ற மூன்று சிறிய உருக்குத் தொழிற்சாலைகளைத் துவக்கலாம் என்று காங்கிரசுத் தலைவரே யோசனை சொல்லியிருந்தார். அவ்வளவு பெரியவரின் யோசனையே புறக்கணிக்கப்பட்டதோ — தள்ளப்பட்டதோ — அலட்சியப்படுத்தப் பட்டதோ —நாமறியோம்; அப்படியிருக்க, ஆலடி அருணாவின் யோசனையையும் நான் சொல்லும் யோசனையையுமா ஏற்கப்போகிருர்கள்?"

கேள்வி :—"ஜப்பான் ஒத்துழைப்பு கிடைப்பதாகக் கூறப்பட்டது எவ்வளவு? ஜப்பானின் உதவி மத்திய அரசுமூலம் கோரப்பட்டதா? மாநில அரசுமுலம் கோரப்பட்டதா?"

அண்ணா :—"மத்திய அரசின் ஒப்புதலுடன் கோரிக்கை எழுப்பப்பட்டிருந்தால் இந்தத் திட்டம் இப்போது செயல்படத் துவங்கியிருக்கும்."

கேள்வி :—"ஜப்பான் தர முன் வந்துள்ள அந்நியச் செலாவணி எவ்வளவு?"

பதில் :—"அந்நியச் செலாவணி எந்த அளவுக்குத் தேவைப்படுமோ அந்த அளவுக்குத் தர ஜப்பான் முன்வந்துள்ளது. குத்து மதிப்பாகக் கூறவேண்டுமானல், ரூ. 30 கோடி அளவுக்குக் கிடைக்கும்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.